1267

உ

# மெய் நிலைப் போதம்.

இஃது

பாண்டியநாட்டுத்திவ்யஸ்தலங்களிலொன்றான

திருப்புத்தூர்

மெய்வழி ஆஸ்ரம சற்குரு ஆண்டவராகிய

ஞான பண்டித ஆஷிக்குல் ரசூல் மகரிஷி

மார்க்கநாதர் அவர்களால்

அருளிச்செய்யப்பட்டு

அவர்களாக்ஞைப்படி பிரசுரிக்கப்பட்டது.

மதுரை

[illegible]ஜியன் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

1931

[ரிஜிஸ்தரானது

26 AUG 1931

R
N31
120268

# மெய் நிலைப் போதம்.

## முன்னுரை.

"நினைவாம் பரத்திடத்தே நிலைமுமின் கட்டுமட்டும்
தனது கிருபையனைத் தான்புகழ்ந்தபின்"

உண்டுபோலின்று மிவ்வுலகத்தின் கண் ஓரறிவுயிர்முதல் ஆறறிவுயிர்வுள்பட யாவரும் இச்சிப்பது இன்பமே. இன்பமும் சிற்றின்பம் பேரின்பமென இருவகைப்படும். இவற்றில் குற்றமற்றமனிதவுடலும் மெய்யறிவும்பூண்ட மனிதர்யாவரும் துக்கசாதனமாகிய சிற்றின்பத்தைப் பொருட்படுத்தாது பேரின்பத்தைக் கைக் கொள்ளுதல் கடனாகுமென்பது இறைவனதுவேதமொழியாகும். இப்பேரின்பத்தைபடைய அவாவுறும் மனிதருக்கு அதற்குரிய மெய் வழியைப் போதித்துக்காட்டவல்ல மெய்ஞ்ஞானிகளின் கிருபையேவேண்டும். மெய்க்குருவி னுபதேசமேமோக்ஷ சாதனமெனப் பேசும் நான்மறை. இதனைபுணர்ந்த ஜீவகோடிகள் உண்மை சிவராஜயோக ஞானிகளைத் தெரிந்துகொண்டு அவர்களுடைய கிருபைக்காளாக வேண்டியது முக்கியகடமையாகும். ஆனால் எக்காலத்திலும்இக்காலத்திலும் மெய்ஞ்ஞானிகளைப்போல்பலர் வேடம்பூண்டு வெறும்பாடங்களை மட்டும் படித்துக் கொண்டு மெய்யறியாது உலகோரை வஞ்சித்து வயிரு

வளர்க்கும் கெர்வத்திரை படர்ந்து குருடாயிருப்பது அன்றி தங்களையண்டிய பிறரையும் பகற்குருடர்களாக ஆக்குகிறார்களே என்று நாங்கள் உணர்ந்து எங்களை ஈடேற்றும் பொருட்டு இதற்குமுன் (1) மெய்வழி நூல் (2) பூரணப்புதையல் (3) ஏறுதுறை (4) கன்னிலக்கணம் (5) சோடசநிலை (6) பிள்ளைத்தமிழ் (7) திடமுறைப்பதம் (8) தௌகீது காமீல் (9) தௌகீதுமக்காம் (10) இராஜ சன்னியாசிநிலை (11) குருமணிமாலை (12) குருமுறுதி (13) ஞானஅகவல் (14) ஸ்ரீதுசுருக்கம் (15) ஞானக்குறள் (16) கலைஞான காண்டம் என்றஞான நூல்களை யியற்றித் தந்தருளிய எங்கள் மெய்வழி ஆஸ்ரம பரமபிதாவாகிய சற்குரு மகரிஷிமார்க்கநாதஆண்டவரவர்களுக்கு அடியேன் பன்முறை தண்டஞ்சமர்ப்பித்து உலகின்கண் மெய்ஞ்ஞானிகளையும் பொய்க்குருக்களையும் பகுத்தறிவதற்குரிய்சாதனங்களை அடியேனுக்குபோதித்தருளுமாறு வேண்டிநிற்க அதற்கிரங்கி எங்களின்மீது கருணை கூர்ந்து அணுவைத்துளைத்து அகண்டவெளியைப்புகட்டியது போன்ற மெய்நிலைப்போதமெனும் இவ்வரும் பெரும் நூலையியற்றி எங்களுக்குப் போதித்தருளினார்கள்.

இந்நூலைக்கருத்துடன் படித்துணர்ந்த எவரும் பொய்க்குருமாரின் சூழ்ச்சியிலகப்பட்டு மயங்கி ஏமாறாது உண்மை மெய்ஞ்ஞானியின் பாதாரவிந்தங்களைக்கைப்பற்றி பிறவியொழித்து அநியாயமரணங்

கடந்து ஜீவன்முக்தராவாரென்பது நாமுணர்த்தாமலே இந்நூன் முகத்தால் விளங்குமென்பது நிச்சயம்.

315
181.48
170768
R

மதுரை. } சீடன்

16—8—1931 } மா.

குறிப்பு:- மேலேகண்டநூல்கள் விலைக்குத்தேவையாயுள்ளவர்கள் தேவகோட்டை ஆர்ச்சு வளைவு வீதியிலிருக்கும் ஷை ஆஸ்ரமச்சீடர் கா. ப. வே. நா. வேங்கடாசலம் செட்டியாரவர்களுக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.

உ

மகரிஷி ஆண்டவரவர்களின் முதற்சீடராகிய
கீழச்சிவல்பட்டி தாக்ளா அரு. அள. சோமசுந்தரஞ்
செட்டியாரவர்களியற்றிய

## சிறப்புப் பாயிரம்.

மாசருந்தே சிகனெந்தன் மார்க்க நாதன்
வாசகங்கள் கேட்டவுடன் வனம்வாழ் ஜெந்தும்
ஆசையுடன் பசிதோரு திருந்து கேட்டு
அங்ஙனமே யுறும்ஞான நாட்ட மென்றால்
தேசமதில் மனுத்தேக மெடுத்தோ ரிங்ஙன்
தெரிந்துமடை யாதவரு முலகி லுண்டோ
பேசரிய அருந்தவத்தோ னருளிச் செய்த
பெரும் பொருளாம் பெட்டகமெய் நிலையின் போதம்.

உ

# மெய் நிலைப் போதம்.

(காப்பு.)

வீடான வடமேரு கிரியினிட பாதம்
வேதமணித் தாயென்வா லாம்பிகையின் பாதம்
நீடாழி யுலகிலெனக் கென்றுவிதித் திருந்து
நீதியுட னெனையாண்ட குருபரன்றாள் காப்பாய்
ஏடான மெய்வழிநூல் பூரணத்தின் புதையல்
ஏறுதுறை யின்குருமு ளூதிகலைக் ஞானம்
வாடாத தவமதிந்நூல் மெய்நிலையின் போதம்
வழுத்தினனென் மலையரசில் மதியரசி யருளால்.

## நூல்.

அங்கமதில் முதல்முதலா யுதித்தபொரு ளெங்கே
அப்புறமு மாருயிரி னிலைத்ததல மெங்கே
பங்கமிலா நடுநிலையென் றெண்பொருளு மெங்கே
பாற்கடலு மால்பள்ளி யறையிருந்த தெங்கே
செங்கமலப் பீடமுமெண் கோணமது மெங்கே
சிறந்திடுமுக் கோணமடி நிலையிடமு மெங்கே
அங்கமதி லிதனையெலா மோரிடத்திற் பேசும்
அன்னவரே ஜகதகுரு வென்றறிய லாமே (1)

ஆதியிலே பிறந்தசத்த மிருந்துவந்த தெங்கே
அப்புப்புங் கலந்துநின்ற வறுபுரிநா லெங்கே
சேதியிதன் முன்னிருந்த முப்புரிநா லெங்கே
சேரியிலே யைந்துவிதக் கலப்பதுவு மெங்கே
மேதினியிற் கலந்தபஞ்ச பூதநிலை யெங்கே
வேதமுத லானவுயிர் நிலைப்பிடமு மெங்கே
சேதியெலா முடம்பினிலோ ரிடந்தனிலே பேசில்
ஜெகத்துக்கெலாஞ் சென்மசா பல்யனெனச்
செப்பே (2)

170768 ... 600 008

மந்ரகலை யுபதேசம் பிறந்ததலை மெங்கே
மண்தீண்டாப் பாதமுமா[illegible]யது மெங்கே
அந்தர்முகப் பார்வையகக் கண்ணிருந்த தெங்கே
ஆதிநட னம்புரிந்த சேரியது மெங்கே
மந்த்ரமணி யுதயகிரி மலையிருந்த தெங்கே
மாமலையி லேசமய சஞ்சிவியு மெங்கே
இந்த்ரமணிப் பெட்டகத்து ளேபேசநா வல்லார்
எமனோலை கிழித்தெறிந்த எம்பிரானென்
றெண்ணே (3)

இருதயத்தில் முச்சுடர்முன் னாடிநிலை யெங்கே
இருந்ததச நாடிமற்று முடிந்தவிட மெங்கே
பிரிந்துவரும் லகிரியுடன் றிரிகோண மெங்கே
பிண்டமதி லேயெழுதா தெழுத்திருந்த தெங்கே
இருந்தவரெ லாம்பட்ட களமதுவு மெங்கே
இந்தவுடம் பினிலேயமா வாசியது மெங்கே
இருந்ததிந்தப் பொருளுடம்பி லோரிடத்திற் பேசில்
எமன்பயத்தைக்கடந்துநின்ற என்னிறைவ னாமே(4

பொய்யுடம்பி னுள்ளேமெய்ப் பொறியிருந்த
தெங்கே
புயனெழுது மெழுத்துமெம னெழுந்தியல்பு
மெங்கே
வையமென்ற நிலவுலக நின்றதுவு மெங்கே
வயதுபத்து யென்றுமுள கன்னிநின்ற தெங்கே
நையிரண்யன் மேற்பாய்ந்த நரசிம்மந்தா னெங்கே
நடுவில் ரெண்டாய் நேர்பிளந்த தூணதுவு மெங்கே
ஐயமிலா திப்பொருளை யெடுத்துடலிற் சொல்வோர்
அன்னவரே விதிகடந்த குருபரனெல்லோர்க்கும்(5

விந்ததனில் நாதம்நின்று விளங்குநிலை யெங்கே
வீசிவரும் வாசியுட நிலைப்பிடமு மெங்கே
கந்தனுக்குப் பால்கொடுத்த தலமதுவு மெங்கே
கணக்கெழுதா தெழுதுகின்ற ஏடதுவு மெங்கே
வந்துவந்து போனமுந்த நாள்களெலா மெங்கே
வானில்வரும் ரவிமதியி னிருப்பிடமு மெங்கே
இந்தவகை யுடம்பினிலோ ரிடந்தனிலே பேசில்
என்ணிறைவ னென்சாமி லென்றறிய லாமே (6)

எல்லோரு மோர்குலமா யிருக்குமிட மெங்கே
எட்டெட்டுக் கலையுமதன் சேர்க்கைநிலை யெங்கே
கல்லாமற் கற்றறியுந் தலமதுவு மெங்கே
கவிக்கிசைக ளெழுந்துவருந் திருத்தலமு மெங்கே
நல்லதண்ணீர்க் கடல்திருப்பாற் கடலதுவு மெங்கே
நஞ்சிருந்த தெங்கெயுண்டு பிழைத்ததல மெங்கே
சல்லாப மறிந்துடலிற் சொல்லவல்லா ரென்முன்
சாவோலை கிழித்தெறிந்த சற்குருவென் றறியே (7)

தலைகாலுங் கால்தலைமே லானதுவு மெங்கே
சாகாத கால்வேகாத் தலையதுவு மெங்கே
நிலைசரணக் கமலமல ராலயமு மெங்கே
நிழற்சாயா மெய்யுடம்பு பொய்யுடலி லெங்கே
பெலமான கலிமாவின் பிராணநிலை யெங்கே
பிரணவத்தின் பொருளுமதி லைந்தடக்க மெங்கே
நிலையிதனை யுடம்பினிலோ ரிடந்தனிலே பேசும்
நீதியனை நித்தியனென் றித்தலத்தி லறியே (8)

தன்னைத்தா னறியுந்திருத் தலமதுவு மெங்கே
தன்னுக்கு ளஷ்டதிசைத் தலைவரெங்கே யெங்கே
அன்னையவள் சிலம்பின்திசை நாதமது மெங்கே
அனுப்பாரும் வைகைநதிக் கரையிருந்த தெங்கே
சின்னஞ்சிறு வாசல்சிதம் பரநடனமெங்கே
சேர்ந்திடுமுவ் வாயிரவர் குடியிருப்பு மெங்கே
தன்னிடத்தே யிதையெடுத்து வுரைத்திடுஞ்சின் முத்தர்
தாழ்குலமென் றுனுமாதி சங்கரவ ராமே (9)

மந்திரமு மெந்திரமும் பிறந்ததல மெங்கே
வானமுதங் கடைந்தளித்த வாசுகியு மெங்கே
அந்தரத்தி லைம்பத்தொரு படியேணியு மெங்கே
அழகான மெகராஜின் கொலுவினிலை யெங்கே
உந்தன்சிரோ ரத்தினத்தி னிலையதுவு மெங்கே
உமையவளா மீஸ்வரித்தாய் கைகலந்த தெங்கே
இந்தநிலை யெந்தனிடத் தெடுத்துரைக்கும் பெரியோர்
எக்குலத்தோ ரெவரெனினு மெனக்கிறைவ ராமே (10)

அடிநடுவு முடியாகி நின்றுலகப் பொய்யில்
அடிமுடியு நடுவாகி நின்றமெய்யு மெங்கே
கொடிநிலையும் பசுபதியு நிற்குநிலை யெங்கே
குவலயத்திற் சாதிகுலம் பிறிந்ததுவு மெங்கே
விடியாமல் விடிந்திருந்த பொன்னிலநா டெங்கே
விடமதுவுண் டமுதமது வூரிவா லெங்கே
நடுவறிந்து வுரைப்பவர்க ளவர்களெசன் மார்க்க
நாதனென்ன வடிதொழுக நற்கதிகை வசமே (11)

குயிலிருந்து கூவுகின்ற கொழுவனங்கொம் பெங்கே
கோதையிளங் கன்னிமக மூதுகொலு வெங்கே
சைலநிறக் கன்னிகையி னுல்கார மெங்கே
சைவத்திரு மேனியின்வி லாசமது மெங்கே
மயிலான வுன்னுயிரின் நிலையிடமு மெங்கே
மாசில்லா மணியறிய வந்திடுவா யிங்கே
துயிலசுற்றுந் திருப்புத்தூ ரெல்லைவள நாடன்
தூய்மார்க்க நாதனின்மெய்ப் போதநிலை முற்றே
(12)

(குருவாழ்க குருவே துணை.)